முதுகலை முதலாமாண்டு – தமிழ் இலக்கியம்

தொல்காப்பியம் – எழுத்ததிகாரம் : முதற்பருவம்

பாடக் குறியீட்டு எண் : 18MTA12C

அலகு : 2 : 3. பிறப்பியல்

4. புணரியல்.

முனைவர். ந. மகாலட்சுமி
உதவிப் பேராசிரியர்.

REDMI NOTE 6 PRO
ந. மகாலட்சுமி

# அலகு-2 - பிறப்பியல்

எழுத்துக்களின் பிறப்பு முறையை விளக்குவது பிறப்பியல். பிறப்பியல் கூறும் கருத்துக்களை 1. எழுத்துக்களின் பொதுப்பிறப்பு, 2. உயிர் எழுத்துக்களின் பிறப்பு, 3. மெய்யெழுத்துக்களின் பிறப்பு, 4. சார்பு எழுத்துக்களின் பிறப்பு முறை, 5. தமிழ் எழுத்துக்களுக்கு மாத்திரை கூறும் முறை என ஐந்தாகப் பகுக்கலாம்.

## 1. எழுத்துக்களின் பொதுப்பிறப்பு:

கொப்பூழ் அடியாகத் தோன்றி மேல் எழும் காற்று 1. தலை, 2. மிடறு, 3. நெஞ்சு என்னும் இடங்களில் நிலைபெற்று, அம்மூன்றுடன் 4. பல், 5. இதழ், 6. நா, 7. மூக்கு, 8. அண்ணம் ஆகிய ஐந்து உறுப்புக்களும் ஒன்றோடு ஒன்று தொடர்புற எழுத்துக்களைப் பிறக்கும். இவ்வெட்டு உறுப்புக்களையும் பிறக்கும் எழுத்துக்கள் வெவ்வேறு தன்மையால் தோன்றும்.

## 2. உயிர் எழுத்துக்களின் பிறப்பு:

உந்தியின் அடியாகத் தோன்றிய காற்று மிடற்றின்கண் வெளிப்பட்டு பன்னிரண்டு உயிரெழுத்துக்களும் பிறக்கும். உயிரெழுத்துக்களும் இடையின மெய்யும் மிடற்றில் தோன்றும். மெல்லினம் மூக்கிலும் வல்லினம் நெஞ்சிலும் இடம் பெற்றுத் தோன்றும்.

- அ, ஆ என்னும் இரண்டு எழுத்துகளும் அண்ணத்தின் தொழிலாகிய வாயைத் திறக்கும் முயற்சியால் பிறப்பனவாம்.
- இ, ஈ, எ, ஏ, ஐ என்ற ஐந்து எழுத்துக்களும் அங்காந்து கூறும் முயற்சியோடு மேல் பல்லை அடி நா உறப் பிறக்கும்.
- உ, ஊ, ஒ, ஓ, ஔ என்ற ஐந்தும் இதழ் குவித்துக் கூறுகின்ற முயற்சியால் பிறப்பன.
- பன்னிரண்டு உயிர்களும் மூன்று வகையாகப் பிறக்கும் எனக் கூறப்பட்டாலும், அவ்வெழுத்துக்கள் ஒவ்வொன்றும் சிறுசிறு முயற்சி வேறுபாடுடையன.

## 3. மெய் எழுத்துக்களின் பிறப்பு:

- ககரமும் ஙகரமும் நாமுதலும் அண்ண முதலும் உறப் பிறக்கும்.
- சகரமும் ஞகரமும் நாவது இடையும் அண்ணத்தது இடையும் உறப் பிறக்கும்.
- டகரமும் ணகரமும் நாவது நுனியும் அண்ணத்தது நுனியும் உறப் பிறக்கும்.
- தகரமும் நகரமும் அண் பல்லின் அடிநா பரந்து சென்று உறப் பிறக்கும்.

REDMI NOTE 8 PRO

- டகாரம் ணகாரம் - அணாந்து நுனிநா அண்ணத்தைச் சென்று ஒற்ற பிறக்கும்.
- றகாரமும் னகாரம் - நுனிநா அணாந்து அண்ணத்தைத் தடவப் பிறக்கும்.
- லகாரம் ளகாரம் - நாவினது விளிம்பு தடித்துப் பல்லினது அணிய இடத்தைப் பொருந்த அல்லது அல்லண்ணத்தை ஒற்ற லகாரமும் அதனைத் தடவ ளகாரமும் பிறக்கும்.
- பகாரம் மகாரம் - கீழ் இதழும் மேல் இதழும் தம்மில் இயையப் பிறக்கும்.
- வகாரம் - மேற்பல்லும் கீழ் இதழும் தம்மில் இயையப் பிறக்கும்.
- யகாரம் - அண்ணத்தை நாச் சேர்ந்த விடத்து மிடற்றினின்றும் எழும் வளியானது இசை அல்லண்ணத்தை அணைந்து செறிய பிறக்கும்.

## 4. சார்பெழுத்துக்களின் பிறப்பு முறை:

"சார்ந்து வரின் அல்லது தமக்கியல் பில" என்று கூறப்படும் சார்பெழுத்துக்கள் தத்தம் முதல் எழுத்துக்களை போன்றே பிறக்கும்.

(எ-டு) குற்றியலிகரம் - இகரத்தைப் போலப் பிறக்கும்

குற்றியலுகரம் - உகரத்தைப் போலப் பிறக்கும்

ஆய்தம் - இது முதலெழுத்து இன்றித் தனியாவாய்ப் பிறக்கும்.

## 5. எழுத்துக்களுக்கு மாத்திரை கூறும் முறை:

எல்லா எழுத்துக்களையும் முன்சொல்லிய பிறப்பிடங்களிலிருந்து மேலெழும் ஓசைக்காற்றினால், வெளிப்படச் சொல்லும் போது, அவை பிறப்பெடுத்து வெளியிடப்படும். இவ்வண்ணம் எழுத்துக்களைப் பிறப்பித்து, வெளியிடும் போது, உள்ளுறுப்புக்களில் தங்கிச்சுழன்று எழும் ஓசைக்காற்றும், இற்றை நாடி மாத்திரை அளவு கூறுதல், அந்தணர் தம் இலக்கண நூல்களில் காணப்படும் செய்தியாகும். எழுத்து ஓசை, வாயிலிருந்து வெளிப்பட்டுப் புறத்தே கேட்குமாறு அமையும் வடிவு தெளிந்த வளியோசைக்கே மாத்திரை அளவு கூறப்பட்டுள்ளது.

# வினாக்கள்

1. ல, ள எவ்வாறு பிறக்கும்
2. பல்லிதழ் இயையப் பிறப்பது எது?
3. எழுத்துக்களின் பொதுப் பிறப்பை விளக்குக.
4. நுனிநா அண்ணம் ஒற்றப் பிறக்கும் எழுத்துக்கள் யாவை?
5. உயிரெழுத்துக்கள் பிறக்குமாற்றை விளக்குக.
6. சார்பெழுத்துக்கள் எவ்வாறு பிறக்கும்.
7. 'தத்தம் திரிபே சிறிய என்ப' - விளக்குக.
8. 'அவ் ஆறு எழுத்தும் மூவகைப் பிறப்பின' - விளக்குக.
9. எழுத்துக்களின் பிறப்பிற்குப் புறனடையாக தொல்காப்பியர் உரைப்பன யாவை?
10. மெய்யெழுத்துக்களின் பிறப்புப் பற்றி விவரிக்க.
11. எழுத்துக்களின் பிறப்பு முறை பற்றி ஒரு கட்டுரை வரைக.

# அலகு 2 – இயல் – 4 – புணரியல்

மொழிகள் நிலைமொழி, வருமொழியாய் நின்று புணருகின்ற நிலையை எடுத்துரைப்பதால் இவ்வியல் புணரியல் எனப்பெயர் பெற்றது. இப்புணரியலை அமைந்துள்ள நூற்பாக்கள் 40. புணர்தலுக்கு இன்றியமையாத சிறப்புக் கருவிகள் இவ்வியலுள் கூறப்படுகின்றன.

தமிழிலுள்ள முப்பத்து மூன்று எழுத்துக்களில் 22 எழுத்துக்களை முதலாக உடைய சொற்களும் 24 எழுத்துக்களை இறுதியாக உடைய சொற்களும் புணரும். அங்ஙனம் புணரும் போது மெய் அல்லது உயிர்களே முதலிலோ, ஈற்றிலோ இருக்கும் உயிர்மெய்.

மொழிக்கு இறுதியிலுள்ள மெய் புள்ளியொடு நிற்கும். மொழி முதலிலுள்ள மெய் உயிரோடு சேர்ந்திருக்கும். குற்றியலுகரம் மெய்போலவே கருதப்படும்.

## எழுத்து வகையால் அமையும் புணர்ச்சி

உயிரீற்றுச் சொல்முன் உயிர் வருதல் – ஆ + உண்டு
உயிரீற்றுச் சொல்முன் மெய் வருதல் – ஆ + (வ் + அ) வளது
மெய்யீற்றுச் சொல்முன் உயிர் வருதல் – ஆல் + இலை
மெய்யீற்றுச் சொல்முன் மெய் வருதல் – ஆல் + (வ்+ஈ) வீழ்ந்தது.

எழுத்து வகையால் நான்காகிய புணர்ச்சி, மொழி வகையால் நிலைமொழி, வருமொழி என இரண்டாகும்.

## சொல் வகையால் அமையும் புணர்ச்சி:

பெயர் + பெயர் → தாய் + தந்தை → தாய்தந்தை
பெயர் + வினை → தந்தை + வந்தார் → தந்தை வந்தார்
வினை + பெயர் → வந்தார் + தாய் → வந்தார் தாய்
வினை + வினை → வந்தார் + சென்றார் → வந்தார் சென்றார்.

என நான்கு வகைப்படும். இவற்றுடன் இயல்பாகவும் புணர்ச்சி அமையும். இயல்பு புணர்ச்சி என்பது நிலைமொழியும் வருமொழியும் கூடும்போது எவ்வித மாற்றமும் இன்றி நிற்பதாகும்.

## புணர்மொழித் திரிபுகள்:

சொற்கள் புணரும் போது ஏற்படும் திரிபு மூன்று வகைப்படும். அவை 1. மெய் பிறிதாதல், 2. மிகுதல், 3. குன்றல். என்று விகாரம் மூன்றும். விகாரமின்றி வரும் இயல்பு நிலையும் விளக்கப்படும்.

## இரு பொருள்!

ஒரே புணர்ச்சியால் இரண்டும் மூன்றும் வரிகள் பயன்படும். சொற்களின் புணர்ச்சிக்குப் பொருள் இன்றியமையாததாகும். சொற்கள் உயர்திணையா, அஃறிணையா என்ற பகுப்பும், பெயரா, வினையா என்ற பகுப்பும் புணர்ச்சியால் கவனிக்கப்படுவது உண்டு.

REDMI NOTE 8 PRO
ந.மகாலட்சுமி

இரண்டு சொற்களின் பொருள் மட்டுமன்றி இரண்டு சொற்களுக்கிடையில் உள்ள தொடர்பு அறியப்படுவது இன்றியமையாதது. அங்ஙனம் சொற்களுக்கிடையே உள்ள தொடர் இருவகையாகக் கூறப்படும்.

1. சொற்கள் புணருகின்ற போது வேற்றுமைப் பொருண்மையாலும் புணரும்.
2. வேற்றுமை அல்லாத அல்வழிப் பொருண்மையாலும் புணரும்.

இவற்றால் புணர்ச்சி, வேற்றுமைப் புணர்ச்சி என்றும். அல்வழிப் புணர்ச்சி என்றும் பகுத்துக் கூறப்படும்.

இவ்விருவகைப் பொருண்மையாலும் சொற்கள் புணரும் போது எழுத்து மிகுதல், சாரியை தோன்றுதல் என்னும் இரண்டு தன்மையனைப் பெறும்.

**பெயரும் வேற்றுமை உருபும்:**

பெயர்களின் பின்னர்தான் வேற்றுமை உருபுகள் புணரும். அங்ஙனம் பெயருடன் சேரும் உருபுகள் ஐ, ஒடு, கு, இன், அது, கண் எனும் ஆறாகும்.

வல்லினம் மெய்யானை மொழிமுதலை உடைய கு, கண் எனும் உருபுகள் புணரும் போது நின்ற இடத்தில் மெய் மிகும்.
(எ-டு) மணிக்கு, மனைக்கண்.

ஆறாம் வேற்றுமை உருபான் அகரம். அகர இறுதிச் சொல்லோடு வரும் போது கெடும்.
(எ-டு) தம் + அது = தமது.
பெயர்கள் அஃறிணை, உயர்திணை என்று இருவகைப்பட்டு புணரும்.

**சாரியை மொழிகள்:**

சொற்கள் புணரும் போது சொற்களுக்கிடையே சாரியை தோன்றும். வேறாகி நிற்கும் இருமொழிகளைத் தம்முள் சேர்த்து வைக்கும் பொருட்டு இயைந்து நிற்கும் எழுத்தோ சொல்லோ சாரியை ஆகும். அச்சாரியை பெரும்பாலும் பெயருக்கும் வேற்றுமை உருபுக்கும் இடையில் வரும்.

1. இன், 2. வற்று, 3. அத்து, 4. அம், 5. ஒன், 6. ஆன், 7. அக்கு 8. இக்கு, 9. அன் எனக் கூறப்பட்ட ஒன்பதும் அவற்றைப் போன்ற பிறவும் சாரியையாகிய சொற்களாகும். 1. தம், 2. நம், 3. நும், 4. எம் (உம்), 5. ஞான்று 6. கெழு, 7. ஏ, 8. ஐ என்னும் சாரியைகளும் தொல்காலத்தில் வழங்கின.

- 'இன்' சாரியையின் இகரம் 'ஆ' என்பதையடுத்து மறைந்து வரும், இயல்பாயும் வரும்.

(எ-டு) ஆ + இன் + ஐ = ஆவினை, ஆனை.

REDMI NOTE 8 PRO
ந. மகாலட்சுமி

- எண்ணுப் பெயர்க்கும் அளவுப் பெயர்க்கும் இடையில் வரும் 'இன்' இற் ஆகும்.
  (எ.டு) பத்து + இன் + அகல் - பதிற்றகல்.
- அவை, இவை, உவை என்பவற்றை அடுத்து 'வற்றுச்' சாரியை வகர மெய் இன்றி 'அற்று' என்று வரும்.
  (எ.டு) அவை + வற்று + ஐ = அவையற்றை.
- னகர ஈற்றுச் சாரியைகளான இன், ஒன், அன், ஆன் என்பன நான்கன் உருபின் முன் றகரமாகும்.
  (எ.டு) விள + இன் + கு = விளவிற்கு.
- 'ஆன்' என்பதிலுள்ள னகரமும் அவ்வாறே நாள் பெயர்க்கு அடுத்து வல்லினம் முதலாக உடைய வினைச்சொல் இடையே வரும் போது றகரமாகும்.
  (எ.டு) பரணி + ஆன் + கொண்டான் = பரணியாற்கொண்டான்.
- அத்து எனும் சாரியையின் அகரம் அகர ஈற்றுச் சொல்லை அடுத்துவரின் மறையும். (எ.டு) மக + அத்து + கு = மகத்துக்கு.
- இக்கு எனும் சாரியையின் இகரம் இகர ஈற்றுச் சொல்லை அடுத்தும் ஐகாரத்தையடுத்தும் மறையும்.
  (எ.டு) ஆடி + இக்கு = ஆடிக்கு, சித்திரை + இக்கு = சித்திரைக்கு.
- எப்பெயரை அடுத்தும், வல்லினம் வரும் போது 'அக்கு' என்பது 'அ' என்று மட்டுமே நிற்கும்.
  (எ.டு) குன்று + அக்கு + கூகை = குன்றக்கூகை.
- 'அம்' சாரியையின் மகரம் க, ச, த வந்தால் ங, ஞ, ந என மாறும்.
  (எ.டு) புளி + அம் + சோறு = புளியஞ்சோறு.
- மெல்லினம் இடையினம் வந்தால், அம் சாரியையின் மகரம் கெடும்.
  (எ.டு) புளி + அம் + மரம் = புளியமரம்.
- 'இன்' எனும் வேற்றுமை உருபையடுத்து 'இன்' சாரியை வராது.
  (எ.டு) விள + இன் = விளவின்.
- அத்து, வற்று இரண்டும் வரும்போது நிலைமொழி ஈற்று மெய் கெடும். வல்லினம் வந்தால் மிகும்.
  (எ.டு) கலம் + அத்து + குறை = கலத்துக் குறை
  அவ் + வற்று + கோடு = அவற்றுக் கோடு.

**எழுத்துச் சாரியைகள்:**

உயிர்மெய் ஒலிகளையே தனியே கூறுவது அருமையாகையால் சாரியை சேர்த்துக் கூறுவர், அவ்வாறு வருபவை காரம், கரம், கான் என்பன
(எ.டு) ஆகாரம், இகரம், ஐகான்.

REDMI NOTE 8 PRO
நடேசனடி சுப்பு

• நெட்டெழுத்தோடு காரம், கான் வாரா. கரம் மட்டும் வரும்
• குறிலுடுத்து மூன்றும் வரும்.

## உயிரீறு:

• நிலை மொழியில் மெய் நிற்க வருமொழியில் உயிர் இருந்தால் உயிரும் மெய்யும் ஒன்றி உயிர்மெய்யாகும்.
(எ-டு) பால் + அரிது = பாலரிது.

• உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே "மெய்யுயிர் நீங்கின் தன்னுரு வாகும்" (தொல் -140) என்று உயிர்மெய் பிரிந்தால் மெய் தன் பழைய வடிவை பெறுமென்பதைக் கூறுவார்.
(எ-டு) ஆல் + இலை = ஆலிலை, அதன் + ஐ = அதனை.

## உடம்படு மெய்:

• நிலைமொழி ஈற்றிலும் வருமொழி முதலிலும் உயிர் வருமெனின் அம்மொழிகளுக்கிடையே உடம்படுமெய் தோன்றும்.
(எ-டு) கலை + அரசி = கலையரசி, பூ + அழகி = பூவழகி, தே + ஆரம் = தேவாரம்.
• இகர, ஈகார, ஐகார ஈற்றுச் சொற்கள் யகர உடம்படுமெய்யைப் பெறும்.
• ஏனையவை வகர உடம்படுமெய்யைப் பெறும்.
• ஏகாரம் ய், வ் ஆகிய இரண்டையும் பெறும்.
(எடு) ஆ + இடை = ஆயிடை, உவமை + இயல் = உவமையியல், கோ + இல் = கோவில்.

புணரியலுக்குப் பொதுவாக உள்ள செய்திகளை தொல் இங்ஙனம் விரிவாக விளக்குகின்றார். சாரியை பற்றியும் வேற்றுமை உருபுகள் பற்றியும் தொல்காப்பியர் இவ்வியலில் கூறுகிறார்.

REDMI NOTE 8 PRO

## வினாக்கள்

1. புணரியல் பெயர்க்காரணம் கூறுக.
2. புணர்ச்சியின் மூவகைத் திரிபுகள் யாவை?
3. 'குற்றியலுகரமும் அற்று என மொழிப' – விளக்குக.
4. 'உயிர்மெய் ஈறும் உயிர் ஈற்று இயற்றே' – விளக்குக.
5. புணர்ச்சியில் தனிமொழி, பலமொழிகள் பற்றி வரைக.
6. 'எழுத்துச்சாரியை' பற்றி வரைக.
7. சாரியையின் இயல்பு குறித்து விளக்குக.
8. 'எழுத்துப் புணர்ச்சி, சாரியைப் புணர்ச்சி' – விளக்குக.
9. 'அடையொடு தோன்றினும் புணர்நிலைக்கு உரிய' – விளக்குக.
10. 'மொழிபுணர் இயல்பு எத்தனை வகைப்படும்' – விளக்குக.
11. 'ஒல்வழி ஒற்றுஇடை மிகுதல் வேண்டும்' – விளக்குக.
12. உயிரெழுத்தின் புணர்ச்சி இயல்புகளைக் கூறுக.
13. புணர்ச்சியில் பொருள் வேறுபடும் இடத்தை ஆராய்க.
14. புணர்ச்சியின் இயல்புகளைத் தொகுக்க.
15. வேற்றுமைப் புணர்ச்சியில் சாரியைகள் வரும் இடத்தை தொல்காப்பியர் வழி விளக்குக.
16. உருபு புணர்ச்சி குறித்து புணரியலில் கூறியவற்றைத் தொகுக்க.
17. சாரியைகள் மொழியில் இடம்பெறும் பாங்கினைப் புலப்படுத்துக.

---

REDMI NOTE 8 PRO